குன்றத்தூர் நகராட்சி

நாள்.02.12.2025

**கூட்டம் எண்.2/2025**

# அவசரக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் டிசம்பர்-2025ம் மாதத்திற்கான அவசரக்கூட்டம் 02.12.2025ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.45 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

அரசாணை (நிலை) எண்.119 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள்.26.06.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13933/2022/எம்ஏ2 நாள்.30.06.2025ல் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுதிறனாளிகளுக்கு பிரதித்துவம் அளிக்கும் வகையில் மாற்றுத்திறனாளிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மன்ற உறுப்பினர்களாக நியமனம் செய்வது தொடர்பாக உரிய வழிமுறைகள் வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் தலைவர், மாவட்ட அளவிலான குழு, காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2507/2025/A6, நாள்.03.11.2025ன்படி வரப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு திரு.ம.அருண்குமார், எண்.5, கீழாண்டை தெரு, குன்றத்தூர், சென்னை - 600069 என்பவர் தேர்வு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் மாற்று திறனாளிகளை மன்ற உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கான நியமனப் படிவம் 2 நாள்.24.11.2025ன் அடிப்படையில் 26.11.2025 அன்று காலை 11.00 மணியளவில் ஆணையாளர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்து பதவிப் பிரமாணம் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு -**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) திரு.ம.அருண்குமார் அவர்களை நகரமன்ற உறுப்பினராக நியமனம் செய்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2124/2025/இ1)

**தீர்மானம் எண்.964 நாள்.02.12.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.2

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 03.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு 07.11.2025 அன்று நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் சாலை பழுதடைந்த பகுதிகளில் வெட்மிக்ஸ் நிரப்புதல். | 1980000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | எழிலரசி | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியத்தினை குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1128/2025/இ1)

### தீர்மானம் எண்.965 நாள்.02.12.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.3

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 21.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப் பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | வெங்கடாபுரம் பகுதியில் கல்வெர்ட் அமைத்தல். | 200000 | ரமேஷ் ஏஜென்சீஸ் | குறைவு |
| | | | எழிலரசி | அதிகம் |

**அலுவலக குறிப்பு -**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1128/2025/இ1)

### தீர்மானம் எண்.966 நாள்.02.12.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.4**

குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு நாள்தோறும் உணவு வழங்குவது தொடர்பான முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 21.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. ஒப்பந்தப் பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (1நபருக்கு) |
|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு நாள்தோறும் உணவு வழங்குவது தொடர்பான முதலமைச்சரின் தூய்மை பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டம் | M/s.Hotel Apoorvaa | ரூ.38.90 |
| | | M/s.Amman Catering | ரூ.41.00 |

**அலுவலக குறிப்பு -**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3936/2025/இ1)

**தீர்மானம் எண்.967 நாள்.02.12.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

குன்றத்தூர் நகராட்சியில் 2025-2026ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 27.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை தொடர்ந்து குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1 | குன்றத்தூர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளில் உள்ள சாலையில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைத்தல் பணி | 785000 | C.N.ராமச்சந்திரன் | குறைவு |
| | | | E.சேகர் | அதிகம் |

<u>அலுவலக குறிப்பு -</u> அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) அவசர அவசியத்தினை குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1128/2025/இ1)**

### தீர்மானம் எண்.968 நாள்.02.12.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

[

## பொருள் எண்.6

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30, எண்.474, குமரன் நகர் என்ற முகவரியில் திரு.P.விஸ்வநாத் என்பவரால் 1500 சதுர அடி காலிமனையில் தரைதளம் தொழிற்சாலையாகவும், முதல் தளம் குடியிருப்பாகவும் கட்டப்பட்டுள்ளது. இதில் 3000 சதுர அடிக்கு Industrial பயன்பாட்டில் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. (வரிவிதிப்பு எண்.179/030/900317) மற்றும் (வரிவிதிப்பு எண்.179/030/900410) ஆகும்.

ஆனால் பழைய வரிவிதிப்பு 3000 சதுர அடி Industrial பயன்பாட்டில் உள்ள வரிவிதிப்பு எண்.900317-ஐ நாளது வரை ரத்து செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டு திரு.P.விஸ்வநாத் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் புகார் எண்.348/M/2025 நாள்.17.10.2025ன்படி புகார் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து தவறுதலாக அளவீடு செய்யப்பட்ட வரிவிதிப்பு எண்.179/030/900317-ஐ (அரையாண்டு வரித்தொகை ரூ.11901/-) 2024-2025 முதல் அரையாண்டு முதல் 2025-2026 இரண்டாம் அரையாண்டு வரையிலான தொகை ரூ.46810/- மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயனாளர் கட்டணம் ரூ.2700/- ஆக மொத்தம் ரூ.49510/-ஐ வஜா செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.3991/2025/அ1)**

### தீர்மானம் எண்.969 நாள்.02.12.2025

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனகாபுத்தூர் ஆற்றுபாலம் முதல் கரைமா நகர் வரை சாலையோரத்தில் உள்ள ஆக்கிரமணங்கள் நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றப்பட்டபோது நகராட்சி மூலம் சாலையோரத்தில் அமைக்கப்பட்ட பிரதான குடிநீர் பைப்லைன்கள் சேதமடைந்துள்ளதால் மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சரிவர செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி கரைமாநகர் பகுதியில் சேதமடைந்த பிரதான குடிநீர் பைப்லைன்களை சீரமைக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு** :

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி பிரதான குடிநீர் பைப்லைன்களை சீரமைக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1128/2025/இ1)

**தீர்மானம் எண்.970 நாள்.02.12.2025**

**ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**